தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௧	மலர்
௪௪	சாதாரண, ஆடி	௪
	(1970 — ஜூலை — ஆகஸ்டு)	

நேமிநாதம்

திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., டிப். (மொழியியல்)
மாயூரம்.

சின்னூல் :— தமிழ் இலக்கணத்தின் எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணிகளாகிய ஐந்து கூறுகளுள், எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் சுருக்கிக் கூறும் நூல் நேமிநாதம் ஆகும். இது குணவீர பண்டிதர் என்போரான் இயற்றப் பெற்ற நூல். தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு இயற்றப் பெற்றதாதல் வேண்டும் என்பது, இதன் சொல்லதிகார இயலமைப்பாலும் இனிது விளங்கும். நன்னூல் தோன்றுவதற்கு முன்னே, இந்நூலைக் கற்றபின்பே தொல்காப்பியம் கற்று வரும் இயல்புடையவராக நம் முன்னோர் விளங்கினர் என்பர்.

பாகுபாடு :— இந்நூலின் முதல் அதிகாரம், இயற்பாகுபாடு இன்றி ஒன்றாகவே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சொல்லதிகாரமோ பல இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொழி ஆக்கம், வேற்றுமை மரபு. உருபு மயங்கியல், விளிமரபு, பெயர் மரபு, வினை மரபு, இடைச்சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்ச மரபு என்பன இந்நூலின் சொல்லதிகார இயல்கள்.

இந்நூலின் நூற்பாக்கள் வெண்பாயாப்பில் அமைந்துள்ளன ஆசிரியப்பாவினுல் மட்டுமே நூற்பாக்கள் இயற்றப் பெறுவது பயின்ற பழந்தமிழ் வழக்காகும். ஆயினும் வெண்பாவினுலும் இயற்றப் பெறலாம் என்ற வழக்கும் இருந்தது என்பது, பேராசிரியர் எழுதும் உரைப்பகுதியால் இனிது விளங்குவதாகும் :—

"செய்யுள் என்றான், அடிவகைச் செய்யுளின் வேறுபட்ட பொருட்பாட்டிற்றாகிய அடி வரைப் பாட்டினுட் சிறப்புடைய ஆசிரியத் தானும், வெண்பாவானும் செய்யப்படும் சூத்திரம் என்றற்கு என்பது. என்னை? மண்டிலப்பாட்டின் உடம்பொடு புணர்த்துச் சூத்திரம் செய்தமையானும், சின்மென் மொழியிற்றாய பனுவல் வெண்பாட்டாகி வருதலானும் என்பது"

நூற்பாத் தொகை:— இந்நூலின் பாயிர வெண்பாக்கள் நான்கு [சிறப்புப் பாயிரம் இரண்டு வெண்பாக்கள்; தற்சிறப்புப் பாயிர வெண்பா ஒன்று; அவையடக்க வெண்பா ஒன்று.] எழுத்ததிகாரம் இருபத்து நான்கு வெண்பாக்களை உடையது; சொல்லதிகாரம் எழுபது வெண்பாக்களை உடையது. அதன் முன்னே தற்சிறப்புப் பாயிர வெண்பா ஒன்று உள்ளது. ஆகவே கூடுந் தொகையாகத் தொண்ணூற்றென்பது வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன.

ஆசிரியர் குறிப்பு:— இதன் ஆசிரியர் களந்தைப் பதிக் குணவீர பண்டிதர் என்பார். இவரே வச்சணந்தி மாலையை இயற்றியவர்.

'இந்நூல் செய்தார் யாரோ எனின், உளமலி பேரருள் உயிர்மிசை வைத்த, வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன், கொள்கையின் வழாஅக் குணவீர பண்டிதன்' எனவரும் பகுதி இதற்குச் சான்றாக அமைகின்றது.

குணவீர பண்டிதர் சமண சமயத்தவர் என்பது இவர் பாடும் கடவுள் வாழ்த்துக்களால் விளங்குவதாகும்.

"பூவின்மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாதம்
நாவினல் நாளும் நவின்றேத்தி — மேவுமுடி (பு)
எல்லாம் உரை எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து"

"தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்துப்
போதார் நறுந்தெரியற் போர்வேற்கட — பேதாய்
விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் திறம்".

என்பன அவ்வெண்பாக்கள்.

எழுத்தாராய்ச்சி ஏழு வகை:- இந்நூலின்கண் எழுத்தினை ஏழு வகையாக ஆராயும் திறம் உள்ளது.

"எண்ணும் பெயரும் முறையும் இயன்றதற்பின்
நண்ணிவரு மாத்திரையும் நற்பிறப்பும் - கண்ணு
வடிவும் புணர்ச்சியும் ஆயவோர் ஏழும்
கடியமரும் கூந்தலாய் காண்"

என்ற வெண்பா இதனைக் காட்டுவதாகவே உள்ளது. அவிநயனுர் என்ற இலக்கண ஆசிரியரும் இவ்வகையாகவே கூறியுள்ளார்; அவரது நூற்பா பின்வருமாறு:

"எண் பெயர்முறை பிறப் பளவியல் வடிவு
புணர்தலோ டேழும் பொருந்திய வழக்கே"

எழுத்துக்களில் முதல் வைப்பாகிய முப்பத்தோ ரெழுத்தும் முதற்கண் கூறப்படுகின்றன.

"ஆவி அகர முதல் ஆறிரண்டாம்; ஆய்தம்இடை;
மேவுங் ககர முதல் மெய்களாம் - மூவாறும்"

இதன்பிறகு சார்பெழுத்துக்கள் முறையே கூறப்பெற்றிருக்கின்றன. பிறப்புப்பற்றிப் பேசும் வெண்பா, 'உந்தி முதலா முந்துவளித் தோன்றி' என்ற தொல்காப்பிய நூற்பாவை அடியொற்றியே அமைந்துள்ளது.

வடசொல்லாக்க வரன்முறை:— வடமொழி தமிழில் ஆகும் வகையினை இரண்டு வெண்பாக்கள் கூறுகின்றன. இது நன்னூற் கருத்தோடு ஒத்ததேயன்றித் தொல்காப்பியர்க்குப் பெரிதும் ஒத்ததன்று என்று கூறலாம். 'வடசொற் கிளவி வடவெழுத்து ஓரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே' எனப் புகன்றனரேயன்றிப் பெரிதும் விளக்க மாகத் தொல்காப்பியர் பேசாத இதனை நேமிநாதம் விளக்கியே செல்கின்றது.

"அகரத்திற் காவும் இகரத்திற் கையும்
உகரத்திற் கௌவும் இருவிற்—ககல்வரிய
ஆருமாம் ஏயாம் இகரத்திற் கோவாகிச்
சேருமுகரத்தின் திறம்"

அருகன்—ஆருகதன், சிவன்—சைவன், இருடிகள்—ஆரிடம், நரன்-இந்திரன் — நரேந்திரன், குலம்-உத்துங்கன் — குலோத்துங்கன், ஆகிய சொல் முடிபுகள் இவ்வெண்பாவினுள் முடித்துக் காட்டப் பெற்றுள்ளன.

"நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரஞ்
சார்ந்த துடலாயிற் றன்னுடல் போஞ்—சார்ந்ததுதான்
ஆவியேற் குன்னுவி முன்னுகும் ஐஔவா
மேவிய ஏஔவும் விரைந்து"

என்பதும் இவ்வாறே ஒருசார் வடசொல் முடிவுகளை வரைந்துணர்த்தும் வெண்பாவே ஆகும்.

சொல்லதிகாரம்:— நேமிநாதத்தின் சொல்லதிகாரம் ஒன்பது இயல்களாக அமைக்கப்பட்டிருக்கின்றது. சொல் ஆராய்ச்சி பின்வரும் வகையான் இயல்வதாக உள்ளது:—

"ஏற்ற திணையிரண்டும், பாலைந்தும், ஏழ்வழுவும்
வேற்றுமை எட்டும் தொகையாறும்—மாற்றரிய
மூன்றிடமும் காலங்கள் மூன்றும் இரண்டிடத்தால்
தோன்ற உரைப்பதாம் சொல்".

வேற்றுமை எட்டாகவே கொள்வர் இந்நூலாசிரியர். எழுவாய் வேற்றுமை என்று முதல் வேற்றுமையை மொழிவர். (41) இரண்டாவது மூன்றுவது என்றே பிறவற்றையும் கூறிவருகின்றனர். தொல்காப்பியத்தைப் பெரிதும் சார்ந்தே சொல்லதிகார வெண்பாக்கள் இயங்குகின்றன. எச்சவியல் என்று தொல்காப்பியர் இயம்பியவாறே இந்நூலாசிரியரும் 'எச்சமரபு' என்ற ஓரியலை இறுதியில் அமைக்கின்றூர். ஒன்பது பொருள்கோள் கொள்கின்றூர். (92)

இறுதியாக எழுத்தில் கிளவி பொருள் படினும் இலக்கண முடிபு அல்ல என்றும் கூறிப் புறனடை விதி தந்து முடிக்கின்றூர்.

"புல்லா எழுத்தின் கிளவிப் பொருள்படினும்
இல்லா இலக்கணத்த தென்றெழிக—நல்லாய்"

என்று வரும் வெண்பாவின் மறுபகுதியே புறனடையாகவும் அமைகின்றது:

"மொழிந்த மொழிப்பகுதிக் கண்ணே மொழியா (து)
ஒழிந்தனவும் சார்த்தி உரை." (95)

தொல்காப்பியர்,

"கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே"

என்றுரைத்தது போன்றதே இதுவும் ஆம்.

பழைய உரை :— இந்நூற் கமைந்த பழைய உரை தொல் காப்பிய முதலிய பழந்தமிழ் நூல்களினின்றும் அவ்வவ்விடத்திற் குத்தக்க மேற்கோள்களை உடையது; விருத்தி உரை என்று கூறத்தக்க விழுப்பம் உடையது. பழைய உரைகளையெல்லாம் பாங்குறக் கற்றுத் தேர்ந்த நல்லோர் ஒருவராகவே இவ்வுரை யாசிரியர் தோன்றுகின்றார்.

"தேனிமிர் பைம்பொழில் தென்மயிலாபுரி, நீல் நிறக் கடவுள் **நேமிநாதர்** தம் திருப் பெயராற் செய்தமையால் நேமிநாதம் என்னும் பெயர்த்து" என்ற இந்நூற் பாயிரத்தால், இந் நூலின் பெயர்க்காரணம் இனிது விளங்குவதாக உள்ளது.

காலம் :— திரிபுவன தேவன் காலத்தது இந்நூல் என்பது வெண்பாப்பாட்டியல் உரைப் பாயிரத்தால் அறியப் பெறுகின் றது. குலோத்துங்க மன்னனுடைய வெற்றிப் பெயராக விளங் குவது திரிபுவன தேவன் என்பது. இதனை முதன் முதலில் வெளி யிட்டவர்கள், திரு. ரா, இராகவ ஐயங்கார் அவர்கள். (1923)

பொழிலன்பர்கள் சுவைக்க

"ஒரு சாரார், 'உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனை விற்பவர்களுக்கே பாவம் உண்டாம், அதனை வாங்கி உண் பவர்க்குப் பாவம் இன்று' எனக் கூறு நிற்பர். விலைக்கு விற்கும் ஊனை வாங்குவார் எவருமே இலராயின், அதனை விற்பாரும் அதன் பொருட்டு உயிர்களைக் கொல்வாரும் இலராதல் சிறு மகாரும் உணர்வரல்லரோ? இவ்வியல்பினை நன்கு தெளிய வைத்தற்கே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர், "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"
என்றருளிச் செய்தார் என்க."

— மறைமலையடிகள் (பொ. து. 5. பக் - 1 (1929)

தெய்வந்தொழும் கற்பு

திரு. இர. குழந்தைவேலு, எம். ஏ.

(1)

தமிழ்கூறு நல்லுலகத்தில் கற்பென்னும் நெஞ்சுரம் விளைந்து நிலைத்தது. இத்திண்மையுள்ளம் பெண்டிரிடத்துச் சிறந்தது. எனவே, தமிழ் மகளிர் தெய்வந்தொழும் வழிபாட்டைக் கடந்தனர்; கொழுநர் தொழுதலைக் கற்புக் கடனாகக் கொண்டனர்; தெய்வந்தொழாது வீறுகொண்டகற்புள்ளம் வாய்க்கப்பெற்றனர். மனையுறை மகளிர்க்குத் தெய்வம் ஆடவரே என்ற அருங் கொள்கை மலர்ந்து நின்றது. இவ் வாழ்க்கை முறை மங்காது, முன்னைப் பழமையாக முளைத்தும் பின்னைப் புதுமையாகப் பூத்தும் விளங்கும்பெற்றி உன்னத்தக்கது,

(2)

இத்தமிழ் வழியில் வளர்ந்து பண்பட்ட உள்ளமுடையவள் கண்ணகி, ஒன்றிய துணையாம் கோவலன் பிரிவில் நெஞ்சகம் வெதும்பிய கண்ணகியின் துயரைக் கரைக்கத் தோழி தேவந்தி எண்ணினள். பிரிந்த கணவரைப்பெறுதற்குத்தெய்வந்தொழுதல் ஏற்புடையது என்னும் கொள்கை குடிகொண்ட மனத்தினள் அவள், இந்நெஞ்சத்துத் தேவந்தி, காமவேள் கோட்டம் தொழுது கண்ணகி கோவலனைப் பெறுதற்குத் தான் தெளிந்த வழியினை அறிவுறுத்தினள். மண்ணில் நல்லவண்ணம் கணவரொடு இன்புற்று வாழத்துடிக்கும் வாழ்வில், தெய்வந்தொழுதலை விழையும் எண்ணமே தமிழ் நெஞ்சத்திற்கு நகையாகுமெனக் கண்ணகி கருதினள். அவள் மனத்தில்

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (திருக்குறள், 55)

என்னும் திருக்குறளின் செம்மை சோர்வின்றி ஊன்றி உயர்ந்தது, ஆதலான், தேவந்திக்குக் கண்ணகி நயத்தக்க நாகரிகம் பொலிய, "பீடன்று" (சிலம்பு கனாத்திறமுரைத்தகாதை. 64) என்று புகழ் தேய்க்கும் செயலை இடித்து இசைத்து இருந்தாள்.

இப் பண்பாட்டு மாட்சியினைத் தெளிதற்கு அடுத்து நினைவில் நிற்கும் காப்பியச் செய்தி ஒன்று உண்டு. அது, சிலப்பதிகாரத்து வாழ்த்துக் காதையின் ஈற்றுப் பகுதி. செங்குட்டுவனுடைய இணையடி தொழாது, "நீடூழி செங்குட்டுவன் வாழ்க"

(வாழ்த்துக்காதை, 29.) என்று ஏத்தினள் கண்ணகி. மற்ற மற மன்னர் அனைவரும் செங்குட்டுவனுடைய தாள் தொழுது வாழ்த்திய வாழ்த்துச் செயலில் வேறுபட்டுத் தனித்து நின்று வாழ்த்திய கண்ணகிக்குப் பெருஞ்சிறப்பு ஈந்தது ஈது. செங்குட்டுவனுடைய நற்றாள் தொழுது வாழ்த்தியருளியிருப்பின், கண்ணகி முதற்கொண்டு வாழ்க்கைத் துணை நலத்தார் தம் கற்புத்திண்மை, செறிவின்றிச் சீர்குலைந்து தாழ்ந்து தளர்ந்து பிழையுற்றுக் கெட்டு வீழ்ந்திருத்தல் கூடும்.

(3)

குறிக்கோளின் இயல்பு உணர்ந்தவர் திருநாவுக்கரசர். நல் வாழ்வுக்கு அரண் செய்யும் நல்லணி குறிக்கோள் என்பதனை,

"குறிக்கோள் இல்லாது கெட்டேன்"

என்னும் நாவின் மன்னர் உணர்த்திய அருந்தொடரில் விளங்கக் கற்கலாம். இக் கல்விக்குத் தக்கபடி, சமய வாழ்வில் பழகிய மகளிர். உறைத்து ஈடுபட்ட வழிபாட்டு வழியில் பெற்ற மனத்தில் நிகழும் எண்ணங்களைக் கருதுதல் நலம் பயக்கும்.

சமயநெறி தமிழகத்தில் தழைத்துப் பரவிப் பொங்கிய நாளில், இளம் பெண்கள் பாவை நோன்பு பூண்ட சிறப்பு இரட்டைப்பாவைகளில் விளங்கித் தோன்றும். திருவெம்பாவைக் கிளிமொழியார் உளங்கனிந்து வெண்ணீருடிய செல்வச்சிவன் நெறி நிற்பவர். செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால் காதலே வடிவானவர் திருப்பாவைக் கன்னியர்.

திருவெம்பாவையில் மகளிர் ஒருங்கு கூடி,

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"
(திருவெம்பாவை, 9.)

என்று புதுமைத் தன்மையுடைய ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனைப் புகழ்ந்துபாடி, உள்ளம் நிலையாய் நிற்க உள்ளே நெகிழ்ந்து குழையக் கசிந்து உருகினர் அப்பாவையர், ஆண்டவன்தன் அடியார்க்கே உரிமையுடையவர்களாதலையும், அவர்தம் தாள் தொழுதலையும் அவாவினர்; அவ்வடியார்களையே தங்கள் மணாளர்களாகக் கொள்ளுதலையும் விருப்புற்றனர்; அக் கடவுளன்பர்கள் உவந்து கனிவொடு வழங்கும் சிவத் தொண்டினைத் தங்கள் கடனெனக்கொண்டு அடிமையாய்ப்

பணிசெய்தலையும் பெரும்பேருக எண்ணிக் களித்தனர். இத்துணை வாழ்க்கை நலங்களும் குறையாது வந்தெய்தும் இன்பநிலை கிட்டுதற்கு ஏழைபங்காளனை இறைஞ்சினர்.

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா
[வோம்
அன்னவரே யெங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்" (திருவெம்பாவை, 9)
"எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க"
(திருவெம்பாவை, 19)

என்பவை, மாணிக்கவாசகரது திருவெம்பாவைத் தொடர்கள்.

இங்குத் திருவெம்பாவையில், தாம் தொழத்தக்கவர்கள் இறைவன் திருவடிகளை நீளநினைத்தலொடு வணங்கி வாழும் சிவனடியார்களே என்றும் அங்ஙனம் தங்களால் தொழப்பெற்ற நல்லடியார்களே தங்களுக்கு மணமக்களாதற்குரியவர்கள் என்றும் கன்னியர் விளக்கிய, குறிக்கோள் நிரம்பிய விழைவின் வரையறை எண்ணத்தக்கது.

அடுத்து ஆண்டாள் தம் திருப்பாவை மகளிர், கடவுளையே காதலராக மதித்து விருப்புற்று வேண்டும் விடாப்பிடியிலும் குறிக்கோள் குறிப்புக்கள் அமைந்து சுவைபயத்தலைத் தெளிய லாம். திங்கள் திருமுகத்துச் சேயிழையார் மணிவண்ணனை அடைந்து பொற்றாமரையடி போற்றினர்: அந்நெடுமாலே கர வற்ற இடைக் குலத்துப் பிறந்த தங்களுக்குப் பல்வகை அணி கலன்களையும் அணிவித்தலோடு ஆடை திருத்தி உடுத்த உடுத் திக்கொண்டு அவனோடு கூடியிருந்து நெஞ்சங்குளிர நெய்துள் ளும் பாற்சோற்றினை மிசைதல் வேண்டும் என்று மொழிந்து தொழுதனர்; கண்ணனோடு தங்களுக்குக் கனிந்த உறவுநலம், அவ்விருவராலும் ஒழித்து அழித்துப் போக்க நீங்காது ஓங்கி நிலைத்தது என்றும் அறிவித்தனர்: தங்களிடத்துக் குற்றேவல் கொள்ளுதலே தக்கது என்றும் உரைத்தனர்: காலமெல்லாம் பல்வேறு பிறவிகளிலும், முகில்வண்ணனோடு கலந்து உறவு பாராட்டி அடிமை செய்தலையே கடனாகப் போற்றி வாழத்தலைப் படும் நினைவே அன்றி, நெஞ்சில் துளிர்க்கும் மற்றத் தகாத

விருப்பங்களைக் கிள்ளிக் களைந்தருளுதலையே இளங்காலையில் இறைஞ்சி வேண்டும் செம்மைசேர் பயன் என்றும் தம் நாகரிக வேட்கை மொழிந்தனர்.

"நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாமணிவோம்;
ஆடையுடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூட, நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து" (திருப்பாவை, 27.)
"உன்றன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது!"
(திருப்பாவை, 28.)

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது:
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்று" (திருப்பாவை, 29")

இவை, திருப்பாவைச் செல்வியர்தம் குறிக்கோள் அருமையினை எளிதே விளக்குதற்கு முன்னிற்கும் அடிகள்.

(4)

சங்கமருவிய காப்பியத்தகத்தும் சமயநெறியின் உரம் பாய்ந்து கடவுட்சுவை மலிந்த இரட்டைப் பாவைகளகத்தும் தமிழகத்து இல்லற மகள் தெய்வந்தொழாது கொழுநன் தொழு வாளென்னும் திண்மையும், தொழுந்தகைமையால் தொழப்பெற ருன் மங்கைக்கு மணாளனாதல் வேண்டும் என்னும் மாண்பும், ஒரு பெருங்கடவுளைக் கன்னி தொழுதாலும் கடவுளே காதலனாதல் வேண்டும் என்னும் உயர்வும் சிறப்புப் பெற்றிருத்தல் வெளிப் படை. இப்பக்குவத்தில், மனைவி தன் தெய்வமாம் துணைவனைத் தொழும் நெறிப்படுத்தப் பெற்ற பெரும் பெண்மைக் கற்பின் வழியது தமிழ்ப் பண்பாட்டின் உயர்நிலை என்பது தோன்றும்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பழமொழி ஒப்புமை

திரு. வ. பெருமாள், எம். ஏ., பி. டி.,
கோலார் தங்கவயல் (மைசூர் மாநிலம்)

மனிதன் அன்றாட அனுபவத்திலிருந்து தோன்றியதே பழமொழி. தமிழும் ஆங்கிலமும் ஓரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக இல்லாவிட்டாலும் இருமொழிகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பழமொழிகள் ஒத்த கருத்துள்ளவையாக விருக்கின்றன, என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதன் எதைச் செய்தாலும் அவசரப்படாமலும், ஆத்திரப் படாமலும் செய்தல் வேண்டும் என்னும் நீதிகொண்ட பழமொழிகள் இருமொழிகளிலும் உண்டு. தானத்தில் சிறந்தது அன்ன தானம்; அதிலும் சிறந்தது நிதானம். 'ஐந்து பணம் கொடுத்தாலும் அத்தனை ஆத்திரம் ஆகாது', 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல', 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு', 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு', இப்பழமொழிகள் யாவும் அவசரமும் ஆத்திரமும் கூடாது என்பதைத் தெளிவு படுத்தி உறுதிப்படுத்துகின்றன. 'Haste makes waste' என்பது இவற்றிற்கு ஒத்த கருத்துள்ள ஆங்கிலப் பழமொழி. இதன் நேர்ப் பொருள் 'விரைவு வீணைக்கும்' என்பது.

முயற்சியின் ஆற்றல் சிறிதாக விருந்தாலும் தொடர்ந்து உறுதியாகச் செய்தால் அரும் பெருஞ் செயலையும் சாதிக்கலாம் என்பது உலகம் கண்ட பேருண்மை. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்,' 'எறும்பு ஊரக் கல்லும் குழியும்'. இவற்றிற்கு ஒத்த கருத்துள்ள பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. சிறு சிறு வெட்டுக்கள் விழுந்தால் மிகப் பெரிய கருவாலி (சீமை ஆல்) மரமும் சாய்ந்து விடும் என்பது ஆங்கிலப் பழமொழியின் கருத்து. '**Little strokes fell great Oaks**' ஓக் என்பது இங்கிலாந்தில் உள்ள பெரிய மரவகை.

ஒவ்வொரு இனத்தார்க்கும், சமயத்தார்க்கும், நாட்டினர்க்கும் தனித்தனி விழாக்களும் திருநாட்களும் உண்டு. இந்து சமயத்தார் திங்கள்தோறும் வருகின்ற அமாவாசையை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது உண்டு. அமாவாசையன்று உண்கின்ற

உணவு அறுசுவையுடன் கூடிய பேருண்டியாகும். இப்பேருண்டி அமாவாசைக்கெனச் சிறப்பாகச் சமைக்கப்படுவதுண்டு. இத்தகைய சுவையும் நிறைவும் வாய்ந்த பேருண்டி பொதுவாக அமாவாசையன்றுதான் கிடைக்குமே தவிர எப்போதும் கிடைக்காது. இவ்வுண்மையைத் தமிழ்ப் பழமொழி உணர்த்துகின்றது. 'அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?'. இந்து சமயத்தார்க்கு அமாவாசை பேருண்டி நாளாக இருப்பதுபோல் கிறித்தவர்களுக்கு கிறித்துமசு பெருவிழாவாக—திருவிழாவாகக் காட்சியளிக்கின்றது. இந்து சமயத்தார் அமாவாசையன்று நெய்யும் பருப்பும், குழம்பும் ரசமும், வறுவலும் பொறியலும், கூட்டும் தாளிப்பும், துவையலும் பச்சடியும், வடையும் பாயாசமும், அப்பளமும் அவியலும், மோரும் தயிரும், ஆகியவற்றுடன் கூடிய பேருண்டியைப் பேரார்வத்துடன் மூக்குப் பிடிக்க—விலாப்புடைக்க உண்டு மகிழ்வதைப் போலக் கிறித்துவ சமயத்தார் கிறித்துமசு அன்று ரொட்டியும், வெண்ணெய்யும், கேக்கும் சாக்லெட்டும், மாமிசவகையும் தின்பண்டமும் உண்டு அகமகிழ்வதைக் காணலாம். இந்து சமயத்தார்க்கு அமாவாசை, கிறித்துவ சமயத்தார்க்கு கிறித்துமசு. கிறித்துமசு ஆண்டுக்கு ஒருமுறைதான் வரும்' என்பது ஆங்கிலப் பழமொழி. 'Christmas comes but once a year'.

வாழ்க்கையில் வாய்ப்பு எப்போதும் ஏற்படாது. வாய்ப்பு ஏற்படும்போது அதைத் தவருமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே அறிவுடைமை; அதுவே சாமர்த்தியம். மனிதன் நல்லவனுக வாழ்ந்தால் மட்டும் போதாது. வல்லவனுகவும் வாழ்தல் வேண்டும். இவ்விதி மனித இனம் முழுமைக்கும் பொருந்தும். 'அலை மோதும் போதே தலை முழுகு', 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' முதலிய தமிழ்ப் பழமொழிகள் இக் கருத்தைத் தெரிவிக்கின்றன. 'சூடுள்ள போதே இரும்பை அடி' 'Strike the iron while it is hot' 'வெயில் அடிக்கும் போது வைக்கோலை உலர்த்து', 'Make hay while the Sun Shines', ஆகிய இரு ஆங்கிலப் பழமொழிகளும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன. இவற்றுள் 'சூடுள்ள போதே இரும்பை அடி' என்னும் பழமொழி தொழிற்சாலைச் சூழ்நிலையிலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும். 'வெயில் அடிக்கும்போதே வைக்கோலை உலர்த்து' என்னும் பழமொழி பொதுவாக நாட்டுப்புறச் சூழ்நிலையிலிருந்தும் குறிப்பாக மருத நிலச் சூழ்நிலையிலிருந்தும் தோன்றியிருத்தல் வேண்டும்.

கவலையோ துன்பமோ இல்லாத மனிதன் உலகத்தில் யாருமே இல்லை. உலகத்திலுள்ள ஒவ்வொருவர்க்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் கவலையும் துன்பமும் உண்டு. 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்', 'எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?', 'சுமப்பவனுக்குத் தெரியும் காவடி பாரம்.' 'முட்டையிடுகிற கோழிக்கு வருத்தம் தெரியும்' முதலிய தமிழ்ப் பழமொழிகள் ஒருவன் துன்பம் மற்றவனுக்குத் தெரியாது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. 'செருப்பு எங்கு கடிக்கிறது என்பது அதை அணிந்திருப்பவனுக்கே தெரியும்' என்பது ஆங்கிலப்பழமொழி. **'Only the wearer knows where the shee pinches'.**

ஒரு காசைச் செலவழிக்காமல் பத்திரமாகப் பாதுகாத்தால் இரண்டு காசு தேறும். முதல் இருந்தால் வட்டிக் கிடைக்கும். வட்டிக் குட்டிப் போடும், என்பது அனைவரும் அறிந்த உண்மை 'ஒரு காசு பேணின் இரு காசு தேறும்' என்பது தமிழ்ப்பழமொழி ஆங்கிலத்திலும் உண்டு. **'A Penny saved is a Penny gained'.** காசைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டால் ரூபாய் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் என்பது மற்றொரு ஆங்கிலப்பழமொழி. **'Take care of the Pence the Pounds will take care of themselves'.** தமிழ்ப் பழமொழியில் தமிழ் நாட்டு நாணயமாகிய 'காசு' இடம் பெற்றிருப்பதைப் போல ஆங்கில நாட்டுப் பழமொழிகளில் அந்நாட்டு நாணயங்களாகிய பென்னி (பென்சு) பவுண்டு முதலியவை இடம் பெற்றிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

'கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையார்க்கு உடைப்பது' போல என்பது நாடறிந்த பழமொழி. சாலையோரத்தில் — வழியில் வீற்றிருக்கும் வழிப்பிள்ளையாரைத் தமிழகம் முழுவதிலும் பரக்கக் காணலாம். பீட்டரிடம் கொள்ளையடித்துப் பாலிடம் கொடுப்பது போல' என்பது தமிழ்ப் பழமொழிக்கு ஒத்த ஆங்கிலப் பழமொழி. **'Rob Peter to pay Paul'** தமிழ்ப் பழமொழியில் தமிழ் நாட்டு வழிப்பிள்ளையாரையும் ஆங்கிலப் பழமொழியில்ஆங்கில நாட்டுப்பீட்டரையும் பாலையும்காண்கின்றோம்.

உயர்ந்த மதிப்புள்ள பொருளின் அருமையும் பெருமையும் இழிந்த மனிதருக்கு ஒருபோதும் தெரியாது. 'கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி?' 'கழுதை அறியுமா கந்தப்பொடி வாசனை?' 'கழுதை அறியுமா கற்பூர வாசனை?' 'குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா?', 'ஒட்டனுக்குத் தெரியுமா

லட்டுருண்டை' முதலிய தமிழ்ப பழமொழிகள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன. இவற்றிற்கு ஒத்த கருத்துள்ள பழமொழி ஆங்கிலத்தில் 'பன்றியிடம் முத்து உதிர்க்காதே' என்று இருக்கின்றது. Do not throw pearls before swine'

ஒவ்வொரு மனிதனும் தன் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்ய வேண்டும் என்பதே மிகச் சிறந்த பொருளாதார நீதி. 'பாய்க்குத் தகுந்தவாறு காலை நீட்டு', 'விரலுக்குத் தக்க வீக்கம்', 'காலுக்குத் தக்க செருப்பு', 'ஏழைக்குத்தக்க எள்ளுருண்டை', முதலிய பழமொழிகள் வருவாய்க்குத் தகுந்தவாறு செலவு செய்ய வேண்டும் என்பதைப் பல்வேறு வடிவங்களில் உணர்த்துகின்றன. 'துணிக்கு ஏற்றபடி கோட்டை வெட்டு' என்பது ஆங்கிலப் பழமொழி. 'Cut your coat according to the cloth'.

ஊருடன் கூடியும் ஒத்தும் வாழவேண்டும் என்பதே கல்வியின் சமுதாயக் கொள்கையாகும் (Social aim). 'ஊருடன் கூடி வாழ்', 'ஊர் ஓட ஒக்க ஓடு நாடு ஓட நடுவே ஓடு', 'பத்துப் பேரேடு பதினோராம் பேராய் இருக்க வேண்டும்', 'நாடு ஒப்பன செய்', முதலிய தமிழ்ப் பழமொழிகள் உலகத்துடன் ஒத்தும் தழுவியும் வாழ வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றன. உரோமாபுரியில் இருக்கும்போது உரோமைப் போல் நடந்து கொள் என்பது ஆங்கிலப் பழமொழி. 'When you are at Rome, do as Romans do'.

இப்பழமொழி ஆங்கிலேயர்க்கும் உரோமாபுரிக்குமுள்ள வரலாற்றுத் தொடர்பைக் காட்டுகின்றது.

மனித வாழ்க்கையின் தொடக்கத்தையும் இறுதியையும், தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று குறிப்பிடுவதுண்டு. இம்மரபைக் குறிக்க ஆங்கிலத்தில் இரண்டு பழமொழிகள் உண்டு: 'From the cradle to the grave', 'From the womb to the tomb' இவ்விரண்டும் ஆங்கில மொழியில் பழமொழி மரபுத் தொடராக (Proverbial Idiom) வழங்குகின்றன.

'கொல்லன் தெருவிலே ஊசி விற்கலாமா' என்னும் தமிழ்ப் பழமொழி ஆங்கிலத்தில் வெவ்வேறு வடிவங்களில் வழங்கி வருகின்றது.

'நியூகாசிலில் நிலக்கரி விற்கலாமா?', இங்கிலாந்தில் உள்ள நியூ காசலில் நிலக்கரிச் சுரங்கம் உண்டு. அங்குள்ளோர் யாரும் வெளியிலிருந்து நிலக்கரி வாங்கமாட்டார்கள் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை. "To carry coals to Castle"

உரோமாபுரியில் பாவமன்னிப்புச் சீட்டுகள் மிகுதியாக விற்கப்பட்டதுண்டு. ஏதென்சு நகரில் ஆந்தைகள் மிகுதி. உரோமாபுரியில் பாவ மன்னிப்புச் சீட்டு விற்கலாமா? 'To carry indulgence to Rome'. 'ஏதென்சு நகரில் ஆந்தைகள் விலை போகுமா?' To bring owls to Athens'

பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாகக் கேரள மாநிலத்திலும் (பழைய சேரநாடு) மிளகு மிகுதி. 'கொச்சியில் சென்று மிளகு விற்றாற்போல' 'கொச்சியில் ரூபாய்க்குக் குறுணி மிளகு' என்பவை தமிழ்ப் பழமொழிகள். இதைக் குறிப்பிட ஆங்கிலத்தில் பழமொழிகள் உண்டு. இந்தியாவிற்கு மிளகு கொண்டு போகலாமா? "To carry pepper to Hindustan". எகிப்தில் மாய வித்தைகள் மிகுதி. மாயவித்தையைக் காட்ட அங்கு யாராவது சென்றால் வெற்றி பெற இயலாது. எகிப்தில் மாயவித்தையைக் காட்ட ஆசைப்பட்டதுபோல என்பது பழமொழி. 'To carry enchantment to Egypt'.

தமிழ்ப் பழமொழிகளைப் போலவே ஆங்கிலப் பழமொழிகளும் வெறும் பழமொழிகளாக இல்லாமல் வரலாற்றைக் காட்டுகின்ற மொழிகளாக இருக்கின்றன என்பதற்கு இவையே நற்சான்றாக அமைந்திருக்கின்றன. அப்பர் தேவாரத்தில் பழமொழிப்பதிகம் அமைந்திருப்பது போலக் கிறித்துவ சமயத்தின் மறையாகிய விவிலியத்தில் பழமொழியியல் (The Book of Proverbs) அமைந்துள்ளது. அப்பர் பழமொழிகளைப் பயன்படுத்தி ஆன்மீகக் கருத்துக்களையும் சைவ சமய உண்மைகளையும் இனிது விளக்குவது போல் பழமொழியின் தந்தையாகவும் பேரறிவின் உறைவிடமாகவும் கருதப்படும் சாலமன் (Solomon) சமய உண்மைகளையும் நீதிக் கருத்துக்களையும் பழமொழியைக் கொண்டு நன்முறையில் விளக்குவதை விவிலிய நூல் பழமொழியியலில் கண்டு மகிழலாம். விவிலியப் பழமொழியியலில் 915 பழமொழிகள் கொண்ட 31 அத்தியாயங்கள் இருக்கின்றன. சாலமன் கி. மு. 974 முதல் கி. மு. 937 வரை இசுரேல் நாட்டை ஆட்சிபுரிந்த பேரறிவு வாய்ந்த வேந்தர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சாலமன் 'பழமொழி' என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

'To understand a *Proverb*, and the interpretation;
the words of the wise, and their dark sayings'.

(The Book of Proverbs. Chapter 1. 6) நல்லறிவுள்ளவன் பழமொழியும் அதன் விளக்கமும் பேரறிஞர்களின் நல்லுரையும்

பொருளுரையும் கேட்டு அறிந்துகொள்வான் என்பது இப்பழமொழியின் கருத்து. தமிழ்ப்பழமொழிக்கும் விவிலியப் பழமொழிக்குமிடையே கருத்தொற்றுமை மிகுதியாகவுண்டு. சான்றுக்காக ஒன்றை மட்டும் இங்கு நோக்குவோம். தாய் தந்தையை மதித்துப் போற்றியும் அவர்தம் சொல்படி நடந்தும் வாழ வேண்டும் என்னும் உயர்ந்த நீதிகொண்ட பழமொழி தமிழில் பல உண்டு. 'தந்தை தாய்-பேண்', தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை, 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை', 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'மாதா பிதா குரு தெய்வம்' சாலமன் பழமொழிகளுள் ஒன்று மேற்குறிப்பிட்ட தமிழ்ப் பழமொழிகளின் கருத்தை உள்ளடக்கிக்கொண்டு விளங்குகின்றது. இதோ அப்பழமொழி :—

'My son, hear the instruction of Thy Father,
and forsake not the law of Thy Mother'

தமிழ் இலக்கியத்தில் பழமொழிகளும் பழமொழிக்கருத்துக்களும் மிகுதியாக இருப்பது போல ஆங்கில இலக்கியத்திலும் உண்டு. உலகப்புகழ் வாய்ந்த நாடகக் கவிஞராகிய செகப்பிரியர் (Shakespeare) தம் நாடகங்களில் பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக வெனிசு நகர வணிகன் (Merchant of Venice) என்னும் நாடகத்தில் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' 'வெளுத்ததெல்லாம் பாலாகுமா' என்னும் பொருள்கொண்ட பழமொழியைப் பயன்படுத்தியுள்ளார்.

'All that glisters (glitters) is not gold'
(The Merchant of Venice: Act II. Scene 7. Line 65)

அன்றியும் செகப்பிரியர் தம் நாடகங்களுக்கு இட்ட தலைப்புகளில் சில பழமொழிகள் போன்றே தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக :

'As you like it' 'Measure for Measure'
Much Ado About nothing'. 'All's well that ends well'
'Twelfth night', or 'What you will'.

முதலிய நாடகத்தலைப்புக்கள் இவண் நோக்கத்தக்கன.

தமிழுக்கும் ஆங்கிலத்துக்குமிடையே ஓரே கருத்தும் ஒத்த கருத்துமுள்ள பழமொழிகள் பல இருப்பினும் விரிவஞ்சி ஒரு சிலவற்றை மட்டுமே இங்குக் கண்டோம்.

(1970 சூன் திங்களில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இரண்டாவது மாநாட்டில் படிக்கப் பெற்றது.)

———

மலை

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திரு. சோம. செல்வகுமார்.

[க] சீர்மிகு சிந்தை சான்ற செந்தமிழ் அறிஞர், வானோர்
காரமிகு மலையைத் தேர்ந்து குறிஞ்சியாய்க் கண்டார்; ஆங்கே
ஏர்மிகு களவும் இன்பும் இயங்கு மென்றருளினார்கள்.
வார்புகழ் முருகன் வாழும் மாண்பொடு, உமையாள் கேள்வன்

[உ] இருப்பிடம் இமயம் மேலும் இனிய மால் வேங்கடத்தான்
பொருப்பினின் பெருமை எம்மால் புகழுதற் கெளிதோ? அம்மா
மருப்புடைகளிறும் மாவும் மாண்புடை மரமும் சந்தும்
விருப்புறுமணியும் தேனும் விளைவிடம் மலையே யன்றோ!

[௩] வெள்ளிபோல் அருவி பாயும் விலங்கலாய் அரணாய் நிற்கும்
உள்ளமும் உணர்வுமிக்கோர் ஓங்குறு தவஞ் செய்தற்குக்
கொள்ளும் நல்லிடமும் ஓங்கற் குவடும், நற்குகையுமாகும்.
ஒள்ளிய சுனையும் ஆங்கே, ஒழுகும் பேராறும் கொண்டு

[ச] உலகினைப் புரக்கும், மக்கள் உவப்பு முறுங்காட்சி நல்கும்
மலைகளே வளங்கட்கெல்லாம் வாய்ப்பினை அளிக்கும், ஈண்டு
நிலையுள பொருளும் ஈதே நிறைதவம் உடையார், ஆசான்
கலைவலார், யாவும் இந்தக் காழ்மலை ஒப்பார் என்றே

[ரு] இலக்கியம் பேசும்; எல்லாம் இதனகத் தடங்கும், வாழ்வு
துலக்கிய மலைகள் ஈண்டு தொல் புகழ் பெற்றவன்றே.
புலத்தினுக் கெட்டாதாகிப், பொருள்களால் வலியதாகி
நலக்கமழ் மலையின் மேன்மை நாவலர்க் கமிழ்தம், அம்மா!

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு

திரு. செ. இரா. செயச்சந்திரன்,
எம். ஏ., (தமிழ்) எம். ஏ. (வரலாறு) டி. பி. இடி.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற புதுவைக் கவிஞன் பாரதியின் விருப்பத்தையும் தாயெழிற்றமிழை எந்தன் தமிழரின் கவிதைதன்னை ஆயிரம் மொழியிற் கேட்க இப்புவி அவாவிற்றென்ற தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து பாயும் நாள் எந்த நாளோ உள்ளம் பருகும் நாள் எந்த நாளோ? என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் விருப்பத்தையும் நிறைவு செய்யும் வகையில் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு நாகரிக நகரென்று நானில மக்கள் போற்றும் பாரிசில் 1970-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15-ஆம் நாள் தொடங்கியது.

முதல் உலகத் தமிழ் மாநாடு 1966-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரிலும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் சென்னை மாநகரிலும் நிகழ்ந்தன.

மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் நாற்பது நாடுகளிலிருந்தும் அறுபது பல்கலைக் கழகங்களிலிருந்தும் வந்து அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிலிருந்து நிதியமைச்சர் மாண்புமிகு. மதியழகன் அவர்கள் தலைமையில் பதினெண்மர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றனர் பாரிசு மாநகரில் காலேசு-த-பிரான்சு என்னுமிடத்தில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ்மாநாட்டுக்கு வந்திருந்தோரனைவரையும் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர். சீன்பிலியோசா வரவேற்றார். பிறகு யுனெசுகோவின் இடைக்காலத் தலைமை இயக்குநர் டாக்டர். மால்கம் ஆதிசேசையா உரை நிகழ்த்தினர். தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர், மு. கருணாநிதி அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றுகையில், "இந்த யுகம் விண்வெளியுகம். இந்த யுகத்தின் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் தமிழ்மொழி வளம்பெற வேண்டும். இந்த விண்வெளி யுகத்தின் தேவைகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் தமிழ்-ஆங்கிலப் பேரகராதி ஒன்றைத் தயாரித்து வெளியிட இம்மாநாட்டில் கூடியுள்ள தமிழறிஞர்கள் முன்வர வேண்டும்

ஆராய்ச்சி என்பது தன்னுள்ளே அடங்கிவிடக் கூடிய ஒன்றன்று என்பதனை ஆராய்ச்சி அறிஞர்கள் உணர வேண்டும். தமிழை உலகப்பொதுமொழியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு திசையை நோக்கி ஆராய்ச்சி இருக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். மாநாட்டில் உரை நிகழ்த்திய நிதியமைச்சர் மாண்புமிகு மதியழகன் பேசுகையில், "தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத தமிழறிஞர்களால் தமிழ் பேசப்படாத ஒரு நாட்டில் தமிழாய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மாநாடு என்ற வகையில் இம் மாநாடு மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. ஆனலும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளைப் புதிய உலகிற்குத்தந்த பிரான்சு நாடு—இதேபோல உலக ஒருமைப்பாடு, சகோதரத்துவம் எனும் அடிப்படையில் எழுப்பப்பட்ட தமிழ்ப் பண்பாட்டை ஆய்வதற்காகவே உள்ள ஒரு மாநாட்டின் புரவலனுகச் செயலாற்றுவது பொருத்தமான செயலாகும். பல நூற்றுண்டுகளுக்கு முன்பே 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' எனப் பாடியவன் ஒரு தமிழ்க் கவிஞன்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலிருந்தே தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு இவைகட்கென ஒரு பாரம்பரியம் தொடங்கிவிட்டது. தமிழ் நாட்டில் ஏற்பட்ட முதல் சங்கத்தை "உலகின் மிகப்பழைய இலக்கியக் கழகம் என அழைப்பது கூட மிக்கப் பொருத்தமானதாகும்" எனக் கூறினர்.

அன்று பிற்பகல் கல்வெட்டுக்களைப் பற்றியும் சிற்பங்களைப் பற்றியும் சிலர் ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். தென்மார்க்கு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அசுகோபார்போலோ என்பவர் சிந்துவெளியில் கிடைத்த எழுத்துக்களைப் பற்றிக் கூறி, அவை திராவிட எழுத்துக்கள் என்றும், திராவிட நாகரிகத்தைக் காட்டும் சின்னங்கள் அங்கே கிடைக்கின்றன என்றும் கூறினர். செக்கோசுலோவேகிய அறிஞர் கமீல் சுவலபில் உரையாற்றுகையில் உருசிய அறிஞர் இருவர் சிந்துவெளி எழுத்துக்களைப் பற்றிச் செய்த ஆராய்ச்சி உறுதியான ஆதாரமுடையதன்று எனக் கூறினர். திரு. ஐராவதம்மகாதேவன் பேசுகையில் சங்ககாலத்தில் வழங்கும் சொற்களோடும் தொடர்களோடும் ஒப்புநோக்கும்போது சிந்துவெளி எழுத்துக்கள் பழைய திராவிட மொழியைச் சார்ந்தன வென்றே தோன்றுவதாகக் குறிப்பிட்டார்.

அடுத்தநாள் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுரையில் டாக்டர். மு. வரதராசனும் பிற அறிஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். மூன்றும் நாள் காலை நிகழ்ச்சியில் மதுரைப்

பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழும் பிற பண்பாடுகளும் பற்றி உரை நிகழ்த்தினார். வேறுபலரும் அப்போது உரை நிகழ்த்தினார்கள். பிற்பகலில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு தலைமையில் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய கருத்தரங்கு நிகழ்ந்தது. பல நாட்டு அறிஞர்கள் அதில் கலந்து கொண்டனர். அன்று மாணவர் தமிழ் மன்றத் தொடக்க விழாவும் நடைபெற்றது. அம்மன்றத்தைக் கூட்டுவித்த திரு. சமாலுதீன் தமிழை மட்டும் பயில்வதனால் தமிழ்நாட்டு மாணவர்கள் நல்ல பயன் அடைய முடியாதென்றும் அயல் நாட்டு மொழியொன்றை அவசியம் கற்கவேண்டுமென்றும் கூறினார். அவ்விழாவுக்குப் புதுவை முதலமைச்சர் மாண்புமிகு. பரூக் மரைக்காயர் அவர்கள் தலைமை தாங்கினார். அந்நிகழ்ச்சியில் தமிழக நிதியமைச்சர், அமெரிக்கஅறிஞர் பிராங்களின், சுவிட்சர்லாந்து தமிழறிஞர், டாக்டர். ஏ. கெல்லர், இலங்கைத் தமிழர், டாக்டர். சிவஞான சுந்தரம், திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. ம. பொ. சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இம்மாநாட்டில் தமிழக அரசு உதவியுடன் சென்னையில் தமிழ் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல், பாரிசு நகரில் தமிழ்ச் சங்கம் நிறுவுதல், அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை இலங்கையில் நடத்துதல் ஆகிய முதன்மையான மூன்று முடிவுகள் எடுக்கப்பட்டன. இவ்வாறு பல சிறந்த அறிஞர்கள் கலந்து கொண்ட மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு தமிழ் வளர்ச்சிக்கும் தமிழை உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பும் முயற்சிக்கும் பெரும் பணியாற்றியுள்ளது.

பொழிலன்பர்கள் சுவைக்க

"அறுவை, உடுக்கை, உடை, கிழி, துணி, துண்டு, வெட்டி, வேட்டி, சிதார், ஆடை, கூறை, போர்வை, துகில், படாம், சீலை, புடவை முதலிய சொற்கள் உடையைக் குறிக்கின்றன. அறுக்கப்படுதலால் அறுவை; உடுக்கப்படுதலால் உடுக்கை, உடை; கிழிக்கப்படுதலால் கிழி; துண்டு படுத்தப் படுதலால் — துணி, துண்டு; வெட்டப்படுதலால் — வெட்டி, வேட்டி எனக் காரணக்குறி பெற்றன.

வீ. உலகவூழியர் (பொ. து. 5. பக் - 48 (1929)

தமிழ்க் கூத்தமைதி - (கட்டுரை - எண் - உ)

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்,
குடந்தை திரு. ப. சுந்தரேசன்.

கூத்துத்தமிழ்க் கூறுபாடுகளில் சதிர் என்ற பகுதியும் மிகப் பழைமையானது என்பதற்குச் சான்றாக (அக்கூத்தினைச் சிவபெருமான் ஆடிய நடம் என்றும் அது சதி வழிவரும் சதிர் என்றும் கூறுவர்) திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையிற் பாடி அருளிய பதிகப் பாடல் ஒன்றைக் காணலாம்.

திருவீழிமிழலை பண் சாதாரி (திருமுக்கால்)

விதிவழி மறையவர் மிழலையு ளீர்நடம்
சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிருடை யீருமை
அதிகுணர் புகழ்வதும் அழகே.

இச்சதிரெனும் கூத்து, கோவிலிலும், வேந்தர் முன்னும் மட்டுமே ஆடப்பெறுவதாம். ஆகவே சதிர் என்பது ஆடல்வகை என நன்கு விளங்கும். ஆடற்கலைப் பொதுவாக ஆண்களுக்கும் சிறப்பாகப் பெண்களுக்குமே பயிற்றுவிக்கப் பெறுவதாகும் என்பர். ஆடற் கலையைப் பயின்று அக்கலையில் வல்லவராகி தொழின்மை பூண்ட பெண்குலம் பற்றி, பழையதோர் மரபு சுட்டும் வரலாற்றினை அழகுபடக் கூறினர் இளங்கோவேந்தர்.

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் ருனத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
(சிலம்பு - அரங்கேற்றுக்காதை)

சிலப்பதிகாரக் காதைகளில் அரங்கேற்றுக்காதையை, நம் இளங்கோவடிகள் தெய்வ என்ற சொல்லால் தொடங்கி இருப்பதே ஒரு தனிப் பெருமை என்பதனை உய்த்துணர்தல் வேண்டும்.

இப்பகுதிக்குரிய அரும்பதவுரை, "பொதியின் மலை தெய்வத் தன்மையை உடையவரை. அகத்தியன் சாபமிட்டருள, அச் சாபத்தை எய்திய, (அருளால் என்று பாடமோதி அருளாற்

சாப நீங்கிய வென்றுமாம்) சயந்த குமாரன், சயந்த குமாரனோடே உருப்பசியும் சாபம் நீங்கிப் போனானென்க, (தலைக்கோற்ருனம்) - நாடக அரங்கு என்றும், 'மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிரென்றது, இப்படியால் ஒப்பில்லாத சிறப்பினையுடைய வானவர் மகளிர் (ஆவார்-தளியிலார்) உருப்பசி வந்து சாபத்தாற் பிறக்கையால் அவள் வழியுள்ளாரையும் வானவர் மகளிர் என்ருராயிற்று" என்பதாம் –இப்பகுதியால், தமிழ்க் கூத்தமைதிக்குரிய நாடகத் தமிழ்ச் சொற்களான, நாடக அரங்கினைக் குறிக்கும்,

தலைக்கோற்ருனம் -- என்பவற்றையும், நாடகம் ஆடுவார் தளியிலார் என்பதனையும், நாமறிந்துணரலாம். தலை, தளி என்ற ஈரெழுத்து ஒரு மொழிச் சொற்கள் மிக்க பழைமை வாய்ந்ததன்ரே கோல், தானம் என்ற விரு சொற்களை இவ்விடத்தே நாடகத் தமிழ்ப் பொருள்பட அறிதல் வேண்டும்.

நடுவிற்றளி, செங்கற்றளி, கருங்கற்றளி, வடதளி, எனு மிடத்து, தளி என்ற சொல் கோயில் என்ற பொருளினைத்தரும். கோயில் என்ற சொல்லோ, இறைவன் உறைகின்ற திருக் கோயிலினையும், மன்னன் உறையும் அரண்மனையையும் குறிப் பதறியலாம். தனக்கெனத் தனித்த உரிமையோடு தளி இல்லாது இறைவனது திருத்தளியையோ, மன்னனது திருத்தளியையோ உறைவிடமாகக் கொள்ளுதலையுடைய வானவர் மகளிர் தளியிலார் எனப்பட்டனர். பிற்கால மன்னர்கள், அவர்களுக்கேயென இடம் வகுத்து மனையமைத்துக் கொடுத்த சேரிப்பகுதிகள் தளிச்சேரி எனக் கூறப்பெற்றது. ஆங்கு உரிமை எய்தி வாழும் பண்டைய வானவர் மகளிர், தளிச்சேரிப் பெண்டுகள் எனப்பட்டனர். இவர்களே நாடகத் தமிழை தத்தம் தாய்மாமன் வழி பயின்று ஆடற்கலையில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். இவையாவும் தனித்தமிழ் வழியேயாம். ஆடன் மகளிர் தன் தாய் மாமனையே ஆடலாசிரிய ளுகக் கொள்வது பழையதோர் வழக்காம்.

தளிப்பெண்டுகள், தளித்தெரு, கோவிலிற் பணிசெய்யும் மகளிர்தெரு என்ற சொற்களைக் காணலாம், மேல் வருவன பிறவற்றையும் ஆங்காங்குக் குறிப்பாம்.

'இந்திரன் அவைக்களத்து ஒருவரையொருவர்
விழைந்து அகத்திய முனிவராற் சாபம் பெற்ற
சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலையில்
மூங்கிலாயும் காஞ்சி நகரத்துத் தேவ கணிகையாயும்
பிறந்தனரென்று (வானவர் கோமான் வானிடை
இருந்து) எனும் ஆசிரியப்பாவாற், சுத்தானந்தப்
பிரகாசப் பரத நூலாசிரியர் கூறினர், எனுங்குறிப்பை
உ. வே சா. ஐயா அவர்கள் கொடுத்துள்ளார்.
இதுவன்றி வடமொழியில் எழுதப்பெற்ற பரத
சாத்திரம் என்ற பெருநூலிலும், (இந்நூல் எழுதப்
பெற்றகாலம் கி. மு. நான்காம் நூற்றாண்டாம்)

"தென்னிந்திய மக்கள் பற்பல நடனங்களிலும் வாய்ப் பாட்டிலும் வாத்திய சங்கீதத்திலும் விசேட ஆர்வம் காட்டு கிறார்கள். அவர்களின் கலைகளில் அழகும் மதுரமும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. அவர்களின் சாமர்த்தியமான அங்க அபிநயங்கள் மெருகுடன் பிரகாசிக்கின்றன, இப்படி லலித கலைகள் உலாவும் நாடானது, வடக்கே விந்திய பர்வதத் தினுலும் மற்ற மூன்று திக்குகளில் சமுத்திரத்தினுலும் சூழப்பட் டுள்ளது" எனும் பொருள் படத்திகழும், பதினன்காம் அத்தி யாயம் கூறும் வடமொழிச் சுலோகத்தைப் பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தி ஐயா அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளார். இவையெல்லாம் பண்டையத் தமிழ்க் கூத்தமைதி பற்றிய நற் சான்றுகளை வலியுறுத்தும் வகையிலிருப்பதனை நாம் நன்கே யறிதல் வேண்டும். இந்திய நாட்டின் பழையவழக்கும், விந்திய மலைக்குத் தென்பகுதி தென்னிந்திய நாடு. வடபகுதி வட. இந்திய நாடு என்பதேயாம். தென்னிந்திய நாட்டின் தனிக்கலை களுக்குப் பழங்கால வடவர் பெருமதிப்புக் கொடுத்து நலம் பாராட்டியுள்ளனர். தமிழகத்தின் ஆடற்கலை மிகமிகத் தொன்மை யானது என்பதும் இதனுனே நன்கு விளங்கும்.

இனி. அடியார்க்கு நல்லார், இளங்கோவடிகள் கடலாடு காதையில் கூறியுள்ளதை எடுத்துக்காட்டியும்
'நான்முகத்துள்ளும்'

"திருந்திய பொதியில் அருந்திறல் அகத்தியன்
சுந்தர மணிமுடி இந்திரன் மகனை
மாணு விறலோய் வேணு வாகென
விட்ட சாபம் பட்ட. சயந்தன்
சாபவிடை யெமக்கருள் தவத்தோ யென்று

மேவினன் தொழுது மேதக வுரைப்ப
அருந்தவ மாமுனி தமிழ்க்கூத் தியர்க்குத்
திருந்திய தலைக்கோற் ருனந் திருமென்
றவனினி துரைப்ப வாகிவந் தனனென்"

என்றுராகலானும், என எடுத்துக் காட்டுவதனையும் அறியலாம். மேலும், அவர், "தெய்வத் தன்மையையுடைய பெரிய பொதியின் மலைக்கண் திருமுனியாகிய அகத்தியன் முன்பால் இட்ட சாபம், இந்திய சிறுவனோடே அம்முனியருளத் தலைக்கோற்ருனத்து நீங்கிய மாறுபடுதலரிய சிறப்பினை உடைய அரம்பையரில் வரிசையிற் குறைவற்ற நாடகத் தொழிலொடு பொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில் வந்த பிறப்பிற் குன்றுதலில்லாத .... மாதவி எனத் தெளிவுறுத்துகிருர்.

இவ்வரலாறு, மிகப்பழையதோர் தமிழகத்து நாடகத் தமிழின் அடிமனை வரலாறு என்பதனை, ஓல்லும் வகையானெல்லாம் இற்றை நாள், பழந்தமிழாராய்ச்சியறிவினையுடைய நாம் நன்கே உளங்கொளல் வேண்டும், இத்தகு மரபு சுட்டும் வரலாற்றில் அகத்தியர் இன்றியமையாது இடம் பெறுதல் பற்றி மிகச் சிறப்புற உய்த்துணர்தல் வேண்டும். தனக்கு மிக மிக முற்பட்ட காலத்தேயிருந்து விளங்கிய முத்தமிழ் முறையினை, முறையே கற்றுத் தேர்ந்து ஆக்கம் புரிந்துதவிய முத்தமிழ்த் துறைபோகிய முனிபுங்கவரன்ரே நம் தமிழகத்தின் பொதியில் வாழ்ந்த அகத்திய முனிவர்!

"சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
ருய்ந்துற வகுத்தனன் அகத்தியன் தானே"
"எழுவகைக் கூத்தும் இழிகுலத் தோரை
ஆட வகுத்தனன் அகத்தியன் தானே"

எனும் எடுத்துக் காட்டிரண்டும் உணரற்பாலதாகும்.

அடியார்க்கு நல்லார், இன்னும் படுவதோர் மேற்கோளொன்றினை வானவர் மகளிர் பற்றி, அகத்தியன் இட்ட சாபத்திற்குக் கரணீயம் யாது? என வினவுவார்க்குக் கூறுவான் போன்று சிலப்பதிகாரம் கடலாடு காதையில் விளக்கமாகக் குறித்திருப்பதனை ஈண்டும் எழுதிக் காணலாம்.

“உருப்பசியின் சாப வரலாறு என்னையோவெனின்?
வயந்த மாமலை நயந்த முனிவரன்
எய்திய வவையின் இமையவர் வணங்க
இருந்த விந்திரன் றிருந்திழை யுருப்பசி
ஆட னிகழ்க பாடலோ டிங்கென
ஓவியச் சேனன் மேவின னெழுந்து

கோலமுங் கோப்பு நூலொடு புணர்ந்த
இசையு நடமும் இசையத் திருத்திக்
கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற்
பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோற்றம்
யாவரும் விழையும் பாவனை யாகலின்

நயந்த காதற் சயந்தன் முகத்தில்,
நோக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை
நாடிய வேட்கையின் ஆடல் நெகிழப்
பாடன் முதலிய பல்வகைக் கருவிகள்
எல்லாம் நெகிழ்தலின் ஒல்லா முனிவரன்

ஒருதலை யின்றி யிருவர் நெஞ்சினும்
காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு
சுந்தர மணிமுடி இந்திரன் மகனை
மாணு விறலோய் வேணு வாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்

சாப விடையருள் தவத்தோய்! நீயென
மேவினன் பணிந்து மேதக வுரைப்ப
ஓடிய சாபத் துருப்பசி தலைக்கட்டும்
காலைக் கழையும் நீயே யாகி
மலைய மால்வரையின் வந்துகண் ணுற்றுத்

தலையரால் கேறிச் சார்தி யென்றவன்
கலக நாரதன் கைக்கொள் வீணை
அலகி லம்பண மாகெனச் சபித்துத்
தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற்
பண்ணிய வீணை மண்மிசைப் பாடி

ஈண்டு வருகெனப் பூண்ட சாபம்
இட்டவக் குறுமுனி யாங்கே
விட்டனன் என்ப வேந்தவை யகத்தென்”

என்பதனறிக.

என. நாடகத் தமிழ் நூலொன்றில் இருந்துஎடுத்துக்காட்டுகிறார்.

தமிழகத்து நாடகமேத்தும் நாடகக் கணிகையர், **தலையரங் கேறுங்கால்** அக்காலத் தமிழ் மன்னர்களே முன்வந்து சிறப்புச் செய்வதும் தொன்னெறிமரபாம்.

தமிழ்நாட்டினியற்கை, **குறிஞ்சி, முல்லை, மருதம் (பாலை) நெய்தல்** என ஐந்திணைப் பகுதியாகவே மிக்க பழங்காலந்தொட்டு அமையப்பெற்றதாகும். அவற்றுள் **மருத நிலமே** நிறைந்திருப்பது **சோழநாடு.** மருதநிலத் தெய்வம் இந்திரன். இந்திரனுக்குரிய திசை **கீழ்த்திசை.** அதாவது **கிழக்கு** இக்கருத்தினுனும் மருதநிலத் தலைவனை **சோழன், இந்திரவிழாவினை** தனது கடற்றுறைப் பட்டினத்தில் ஆண்டுதோறும் எடுப்பதும் தொன்னெறி வழக்கு எனப்படும்.

அத்தகு இந்திரன் மகன் **சயந்தன்,** அஃதும் தமிழகத்து முனிபுங்கவரால் (அகத்தியர்) சாபம் பெற்றுச் சிறப்பாகத் **தமிழ்க்கூத்தியர்க்கே தலைக்கோலாக** விளங்குவதால் அரசன் **அத்தலைக்கோலுக்கே** மிக்க வரவேற்பு செய்து தலைக்கோல் அமையும் தானத்திற்கும் மதிப்புக் கொடுத்து அத்தலைக்கோலை நகர்வலம் செய்வித்து உரிய தானத்தில் அமைக்கச்செய்து வந்தனை, வழிபாடு முதலியன இயற்றச்செய்து **தலைக்கோலிவைக்குப்** பரிசில் நல்குவதும் பெருவழக்காம்.

பொழிலன்பர்கள் சுவைக்க

காயம்

"இந்நாளில் காயம் என்னுஞ் சொல் பெருங்காயம் (asafoetida) என்ற பொருளில் வழங்கி வருகின்றது. பழைய தமிழ் நூல்களில் பயின்றுவரும் அச்சொல் இப்பொருளை உணர்த்தவில்லை, 'படைகொண்டார்' என்று தொடங்கும் 253-ஆம் குறட்பாவின் உரையில், 'சுவைப்பட வுண்டல் காயங் களான் இனிய சுவைத்தாக்கியுண்டல்' என்பர் பரிமேலழகர். திருச்செந்தூரிலுள்ள ஒரு கல்வெட்டு காயம் என்பதின் பொருளை உணர்த்துகின்றது. அஃது வருமாறு.

(41)...**காயம் மிளகமுது** (42) **மஞ்சளமுது சீரகவமுது சிறுகடுகமுது** (43) **கொத்தமலி அமுது ஏற்றிக் காயம் ஐந்து** — இக் கல்வெட்டினுல் காயங்கள் ஐந்துள்ளன என்பதும் அவை மிளகும் சீரகமும் மஞ்சளும் சிறுகடுகும் கொத்தமல்லியுமாம் என்பதும் நன்கு புலப்படுகின்றன,

— **சதாசிவ பண்டாரத்தார்**

(பொழில்துணர் - 12 - பக். 299) (1937)

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்)

திரு. பி. இராமநாதன், பி. ஏ., பி. எல்., சென்னை.

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் "ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி - 2இல் (1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323 — 343-இல் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்]

28. இவ்விந்தையான சாதியினரை முதன்முதலில் 1868-ஆம் ஆண்டில் வெளிவந்த "மதுரை நாட்டுக் கைநூலில் நெல்சன் குறிப்பிட்டார். பிறகு 1874-இல் வெளிவந்த இண்டியன் ஆண்டிகுவாரி 3-ஆம் தொகுதியில் சே. ஏ. பாயில் இவர்களைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளியிட்டார். 1891-ஆம் ஆண்டு "இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்" 13-ஆம் தொகுதியின் (சென்னை மாகாணத்தைப்பற்றியது, எச். ஏ. ஸ்டுயுவார்ட் எழுதி, சென்னை அரசு அச்சகத்தில் 1893-ஆம் ஆண்டில் வெளிவந்தது), 233-ஆம் பக்கத்தில் கோட்டை வேளாளர் குறிப்பிடப்படுகின்றனர். 1910-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 26-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை சென்னை "மெயில்" நாளிதழில் 3-ஆம் பக்கத்தில் கோட்டை வேளாளரைப்பற்றி வி. சுப்பாராவ் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்று வெளிவந்தது. அவர்கள் சாளுக்கியரோடு தொடர்புடையவர்களாகி இருக்கலாம் என்பர் அவர். 1911-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் மாலோனியும் இவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்கள் தொகை குறைந்து கொண்டே வந்ததை மாலோனி குறிப்பிட்டார்[41] 1916-ஆம் ஆண்டு தங்கள் குலம் அறுகிவிடா

41, "இவர்கள் விசித்திர வழக்கங்களின் மகிழ்ச்சி(?!) யான முடிவு பின்வரும் விவரங்களின் மூலம் தெரியவரும். இக்குலத்தில் உள்ள ஆண்கள் 52; பெண்கள் 42, 42 பெண்களில் 17 பேர் கைம் பெண்கள், கைம்பெண்களை மறுமணம் செய்ய அனுமதிப்பதில்லையாகையால் அவர்களால் இனிக்குலம்

வண்ணம் பார்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் மக்கட்பேற்றை வளர்க்கும் தெய்வமாகக் கருதப்படும் உலகம்மைக்குக் கோட்டைக் கருகில் கோயில் எழுப்பிப் பார்த்தனர். இடையில் கோட்டைக்கு வெளியில் வாழும் தங்களை ஒத்த பிற சாதியினரிடம் பெண்ணெடுக்க முயன்றனர். ஆனால் பிறர் தங்கள் பெண்களை மண்சுவர் மதில்களுக்குள் மீளாச் சிறையிருக்க அனுப்ப ஒருப்படவில்லை. 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி[42]. கோட்டை வேளாளர் தொகை ஆண்கள் 37, பெண்கள் 24, சிறுவர் சிறுமியர் 7 எனக் குறைந்துவிட்டது. 1932-ஆம்[43] ஆண்டில் கே. என். கிருட்டிணசுவாமி அய்யர் இக்குலம் பெருகுவதற்கான வாய்ப்புக்களை நுணுகி ஆராய்ந்து மாலோனியின் கூற்று மெய்யாகி விடக் கூடும் என முடிவு கட்டினர். 1962-இல் கோட்டை வேளாளர் எண்ணிக்கை

பெருக வழியில்லை, மணமான பெண்கள் 18. அவர்களில் 6 பேர் குழந்தை பெறக் கூடிய வயதைத் தாண்டியவர்கள். மணமாகாத 7 பெண்கள் 15 அல்லது அதற்குக் குறைந்த வயதுடையவர்கள். 52 ஆண்களில் 18 பேர் மணமானவர்கள். மணமாகாதவர்களும் மனைவியை இழந்தவர்களுமான 20 முதல் 50 வரை வயதுள்ள 20 ஆண்களை மணக்க இக்குலத்தில் பெண்கள் கிட்டார். எனவே இக்குலம் நீடிப்பது (குழந்தை பெறக் கூடிய வயதிலுள்ள) 12 பெண்களையும் மணமாகாத 7 சிறுமியரையும் பொறுத்ததாகும். கடந்த பத்தாண்டுகளில் மணமான பெண்களுள் 16 பேருக்கு மொத்தம் 8 குழந்தைகளே பிறந்தன என்பதைப் பார்க்கும் பொழுது இக்குலம் நீடிப்பது குறித்த எதிர்காலம் ஒளியுள்ளதாக இல்லை."

42. எம். டபிள்யூ. எம். யீட்சு: "இந்திய மக்கள் தொகைக் கணக்கு 1931"; தொகுதி 14; சென்னை அரசு அச்சகம் 1932; பகுதி 1; பக்கங்கள் 338-9

43, கே. என். கிருட்டிணசுவாமி அய்யர், மேற்குறிப்பிட்ட நூல் பக்கம் 303. "1932இல் கோட்டை வேளாளர் எண்ணிக்கை ஆண்கள் 40, பெண்கள் 20, ஆகமொத்தம் 60. பெண்களில் 5 பேர் கைம்பெண்கள். அவர்கள் சாதி வழக்கப்படி அவர்கள் மறுமணம் செய்யக்கூடாது. மணமான பெண்கள் 12 பேர். அவர்களில் மூவர் குழந்தை பெறக்கூடிய வயதைத் தாண்டியவர்கள், மூவர் மணமாகாத சிறுமியர் (இருவர் இரண்டு வயதுக்குட்பட்டவர். ஒருத்தி சுமார் 12

ஆண்கள் 34-ம் பெண்கள் 30-ம் ஆக இருந்தன எனத் திருமதி உமா குகா கூறுகிறுர். மணஞ்செய்யக் கூடிய வயதுள்ள ஆண்கள் 8 பேரும் மணம் செய்யக்கூடிய வயதுள்ள

வயதினள்). 40 ஆண்களில் 17 பேர் மணமானவர்கள். 5 பேர் மணமாகி மனைவியை இழந்தவர்கள் (அவர்கள் சுமார்50-லிருந்து 70 வயதுக்குட்பட்டவர்கள் ஆகையால் மீண்டும் தம் குலத்தில் மறுமணம் செய்யமாட்டார்கள் எனலாம்.) 18 ஆண்கள் மணமாகாதவர்கள், அவர்களில் 6 பேர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், அவர்கள் தம் குலத்திலேயே மணம் முடிக்க இயலாது. 10 பேர்கள் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள். 15 வயதுக்கும் 20க்கும் இடைப்பட்ட இருவரில் ஒருவன் 12 வயதுச் சிறுமியின் உடன் பிறந்தான் எனக் கூறப்படுகிறது. சாதகங்கள் பொருந்தினுல்தான் இச்சாதியினரிடையே திருமணம் நிச்சயிக்கப்படும் எனக் கூறப்பட்டது. அப்படியாயின் அந்த 12 வயதுச் சிறுமியின் சாதகமும் அவளை மணக்கத்தக்க 20 வயதுக்குட்பட்ட ஒரே இளைஞனின் சாதகமும் பொருந்தி வராவிட்டால் அவள் மணமில்லாதிருக்க வேண்டும். அல்லது மணமாகாத வயதான ஆண்களில் ஒருவரை மணக்கவேண்டும். மணமாகாத வயதான ஆண்கள் அனைவரிலும் இளையவரும் அவளைவிட 20 ஆண்டுகளாவது முதியவராக இருப்பார். இப்பொழுது ஓராண்டு நிறைந்த இரு சிறுமியரும் 15 வயது வரை வாழ்ந்தால் 1932ஆம் ஆண்டில் 15 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டோராக உள்ள பத்துச் சிறுவர்களிலிருந்தே அவர்கள் கணவன்மார் தெரிந்தெடுக்கப்படவேண்டியதிருக்கும். கோட்டைக்குள் 25 குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 11 குடும்பங்களில் ஒவ்வொன்றிலும் குழந்தையற்ற வயதான கைம் பெண்களோ அல்லது மனைவியிழந்தவர்களோ அல்லது மணமாகாத ஆண்களோ தான் உள்ளமையால் அக்குடும்பங்கள் தங்கள் சந்ததியை நீட்டிக்க விரும்பி ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ள பிற குடும்பங்களிலிருந்து குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்கத் தொடங்கினுலொழிய, அண்மையிலோ, சில நாட்கழித்தோ அற்றுப் போக நேரிடும். மணமான பெண்களைக் கொண்ட குடும்பங்களில் பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் அறுவரே இருக்கின்றனர். எனவே மாலோனி 1911ஆம் ஆண்டு கூறியபடி இவ்விசித்திரமான குலத்தினர் தொடர்ந்து நீடிப்பதற்கான வாய்ப்புக்கள் சிறப்பானவையாக இல்லவே இல்லை. வாரிசுகள் இல்லாக் குறையால் இக்குலத்தோரின் சொத்துக்கள் ஒரு சிலரிடம் குவிகின்றன. அளவுக்கு மிஞ்சிய செட்டான நிர்வாகத்தாலும் இக்குலத்தோர் செல்வத்தின் மதிப்பு மிகக் கூடியுள்ளது.

பெண் ஒருத்தியுமே இருந்தனர் எனக் கூறுகிறார்.[44] இவ்வாறு 1911ஆம் ஆண்டு 94 பேர்களாக இருந்த கோட்டை வேளாளர் 1962-க்குள் 64 பேராகக் குறைந்து விட்டனர். தன்னுடைய "இந்தியாவில் சாதி" 4-ஆம் பதிப்பில் கட்டன் கூறுவதுபோல் நெருங்கிய உறவினர்களுக்குள்ளேயே தொடர்ந்து திருமணங்

---

44. உமா குகா (இந்திய மானிடவியல் ஆராய்ச்சித்துறை):- "கோட்டை வாழுநர்" — "இந்தியாவில் மனிதன்" (தாளிகை) தொகுதி 45. பகுதி 3 (1965) பக்கங்கள் 228-32. 64 கோட்டை வேளாளரும் 15 குடும்பங்களில் அடங்கியிருந்தனர் 6 கூட்டுக் குடும்பங்கள்; 9 தனிக்குடும்பங்கள் (மனைவியை இழந்த இரண்டு ஆண்கள் உட்பட) அந்த 64 பேர்களின் மண நிலை பின்வருமாறு :

	ஆண்கள்	பெண்கள்
மணமானவர்கள்	16	16 (இவர்களில் 6 பேர் குழந்தைபெறும் வயதைத் தாண்டியவர்கள் அவ்வறுவரிலும் மூவர் மகப் பேறற்றவர்கள்)
மனைவி/கணவன் இழந்தோர்	2	5
மணமாகாதவர்	6	1 (18 வயது)
12 வயது வரையுள்ள குழந்தைகள்	10	8
	34	30

இக்குலப்பெண்கள் பருவமடையும் வயது முதலியவைபற்றி குகா சேகரித்த விவரங்கள் கீழ் வருபவையாகும்:—

பருவமடையும்போது சராசரி வயது	14 - 50
மணமாகும் போது ,,	14 - 80
உடலுறவு ஏற்படும்போது ,,	14 - 86
முதற் குழந்தை பிறக்கும் போது சராசரி வயது	20 - 36

(குழந்தை கருத்தரிக்குமுன் இடைவெளி - 4-74 ஆண்டுகள்)

நடந்து வந்தால் பிறக்கும் குழந்தைகளில் ஆண்கள் எண்ணிக்கை அதிகமாகவும் பெண்கள் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும் என்ற கருத்தை இக்குலத்தோர் வரலாறு மெய்ப்பிக்கிறது.[45]

29. 1917 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்ட கெசட்டியர் முதற் பகுதியில் இக்குலத்தோர் மிகுந்த செல்வம் படைத்திருந்தனர் என பேட் கூறினர்.[46] 1962இல் குகா பார்த்தபொழுது 15 கோட்டைவேளாளர் குடும்பங்களும் 500 ஏக்கர் நன்செய் நிலங்களும், ரொக்கமாக 50 இலட்சரூபாய்களும்உடையவர்களாக இருந்தனர். ஒருகுடும்பத்தின்சராசரி ஆண்டுவருமானம் ரூ. 18666பேட் எழுதும்பொழுது இக்குலத்தில் ஆங்கிலம் பயின்றவர் ஒருவரும் இல்லை; இக் குலத்தோரில் ஒருவர் கர்ணமாகவும் மற்ருெருவர்

---

45. சே. எச். கட்டன்: "இந்தியாவில் சாதி"; 4ஆம் பதிப்பு பம்பாய்; ஆக்சுபோர்டு பல்கலைக் கழக அச்சகம், இந்தியப் பிரிவு, 1963, பக்கம் 131; — "ஆண்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது ஒரு இனம் அற்றுப்போகும் பொழுது காணப்படும் நிலைமையாகும் என்பது ஆண் பெண் எண்ணிக்கைகள் குறித்து அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது. நாய்களிடம் செய்த பரிசோதனைகளிலிருந்து நெருங்கிய உறவினர்களுக்குள்ளேயே திருமணங்கள் நடைபெற்றுவந்தால், பிறக்கும் குழந்தைகளில் அதிக விழுக்காடு ஆண்களாகவே இருக்கும் என்று கீப் கூறுவதை சார்சு பிட்ரிவர்சு தன்னுடைய 'கலாசார மோதல்' பக்கம் 111இல் ("கேம்பிரிட்சு தத்துவக் கழக நடவடிக்கைகள்" 14ஆம் தொகுதி பக்கங்கள் 21 முதல் வருவனவற்றைக் குறிப்பிட்டுக்) கூறுகிருர்.

46. இனங்கள் தாமே மாள்வது குறித்த தற்காலக் கருத்துக்களை மாலோனி இக்குலத்தினருக்கு விளக்கினுர். ஆனுல் அவர்களோ தங்கள் வழக்கங்களின் விளைவுகளைப் பற்றி முழு மனநிறைவு தெரிவித்தனர், தங்கள் கருத்துக்கு ஆதரவாக அவர்கள் கூறிய காரணம் மாலோனியை வியப்பிலாழ்த்தியது. அக்காரணமாவது. "ஒரு குலத்தினரின் உடைமைகளில் பங்கு பெறுவதற்குரியோர் தொகை குறையக் குறையவே அக்குலத்தினர் ஒவ்வொருவரின் செல்வமும் மகிழ்ச்சியும் மிகும்" என்பதாகும்.

கிராம முனிசீபாகவும் இருந்தனர். 1932-இல் கிருட்டிணசாமி ஐயர் எழுதும் பொழுது அவர்கள் ஓரளவு முன்னேறிவிட்டனர். அவர்களில் ஒருவர் சீவைகுண்டத்தில் வக்கீலாகவும் மற்றொருவர் சென்னைப் பொறியியற் கல்லூரியில் மாணவராகவும் இருந்தனர். 1962-இல் திருமதி குகா பார்த்த பொழுது "செல்வச் செழிப்பிருந்தும் கோட்டை வேளாளரிடம் மகிழ்ச்சியில்லை. அவர்கள் கவலை தோய்ந்தவர்களாகவே தோன்றுகின்றனர். அவர்களிடம், அதுவும் பெண்களிடம் சிரிப்பைக் காண்பது அரிது. வயது சென்ற பெண்களுள் சிலர் மனநோய்களை உடையவர்களாக இருக்கிறார்கள். குழந்தைகளிடம் கூட வாழ்க்கை இன்பமானது என்ற உணர்ச்சியைக் காணோம். கோட்டை அச்சமூட்டுவதாகவும் மக்கள் நடமாட்டமற்றதாகவும் காணப்படுகிறது." இக்குலத்தினர் தொகை நாளுக்குநாள் குறைந்து வந்திடினும், இவர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாக இருப்பினும், ஆண்களில் பலர் உயர் கல்வி பெற்றிருப்பினும், இக்குலத்தினரின் விசித்திரமான சாதி வழக்கங்கள் எவற்றையும் அவர்கள் விட்டு விடுவதற்கான அறிகுறிகள் இல்லை.

30. கொத்தமார் எனப்படும் ஒரு குலத்தினர் தொன்று தொட்டுக் கோட்டை வேளாளருக்கு வேலைக்காரர்களாக இருந்து வருகின்றனர். முற்காலத்தில் அவர்கள் கோட்டை வேளாளருக்கு அடிமைகளாக இருந்தனர். 1840-ஆம் ஆண்டு வரை[47]. அவர்கள் கோட்டைக்குள்ளேயே ஒரு மூலையில்

---

47. கொத்தமார் கோட்டையை விட்டு வெளியேறக் காரணமான நிகழ்ச்சிகள் பின்வருமாறு பேட் எழுதிய திருநெல்வேலி மாவட்ட கெசட்டியர் தொகுதி 1, பக்கங்கள் 438-9-இல் கூறப்பட்டுள்ளன :— "இவ்வூழியர்கள் கல்வீடுகள் கட்டி ஓடு போட்டுக் கொள்ளலாயினர். இது வழக்கத்திற்கு மாறானதுஎன்றுஅவர்கள் எசமானர்கள்கூறினர். பிள்ளைமார்கள் வழக்குத்தொடர்ந்தனர். கொத்தமார் அப்படிப்பட்ட வீடுகளைக் கட்டக் கூடாது என 2839-இல் நீதிமன்றம் ஆணையிட்டது அதன் பின்னர் இழப்பீடு கேட்டும் கொத்தமார் ஏற்கெனவே கோட்டைக்குள் கட்டியிருந்த நான்கு கல் வீடுகளையும் இடித்து விட வேண்டும் என்று கோரியும் மற்றொரு வழக்குத் தொடர்ந்தனர் பிள்ளைமார்கள். கொத்தமார்களோ கோட்டையைக் கட்டியதே தங்கள் முன்னோர்கள்தாம் என்றும், எனவே தாங்கள் பிள்ளைமாரைவிட எவ்வகையிலும் குறைந்தவர் களல்ல என்றும் வாதாடினர். ஆனால் நீதிமன்றமோ

குடியிருந்தனர் அப்பொழுது கொத்தமார் பெண்களையும் கோட்டைக்கு வெளியில் விடுவதில்லையாம்.[48] அவர்கள் தங்கள் எசமானர்கள் முன்னர்க்குடியிருந்த இடத்திலிருந்து அவர்களுடனேயே கூட சீவைகுண்டத்திற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. பெண்கள் செய்யக்கூடிய வீட்டு வேலைகளனைத்தும் கோட்டை வேளாளர்களுக்குக் கொத்தமார் பெண்களாலேயே செய்யப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

கொத்தமார் பிள்ளைமாரது அடிமைகளே என்று கூறிப் பிள்ளைமார் பக்கம் தீர்ப்பளித்தது. "எசமானர்களுக்கும் அடிமைகளுக்கும் சற்று வேறுபாடு இருக்கவேண்டும் என்பது நியாயமும் இன்றியமையாததும் ஆனது மட்டுமன்றி இந்நாட்டில் வழக்கமானதும் கூட" என்று கூறியது நீதிமன்றம். கோட்டைக்குள் தொடர்ந்து குடியிருந்திட வேண்டுமானால் பணிவுள்ள அடிமைகளாக இருந்திடல் வேண்டும்; அப்படி இருந்திட விரும்பாவிட்டால் தங்கள் வீடுகளை இடித்து வீட்டுக் கூரை முதலிய பொருள்களைக் கோட்டைக்கு வெளியே எடுத்துச் சென்றுவிடவேண்டும் எனக் கொத்தமார்களுக்கு ஆணையிடப் பட்டது. கொத்தமார் கோட்டையை விட்டு வெளியேறிவிட முடிவு செய்திருக்க வேண்டும்; ஏனெனில் இப்பொழுது உயிரோடு இருப்பவர்கள் நினைவிற்குத் தெரிந்து கொத்தமார் எவரும் கோட்டைக்குள் குடியிருந்ததில்லை. இன்றும் (1916) சீவைகுண்டத்தில் கொத்தமார் குடும்பங்கள் சுமார் 50-க்கு மேல் உள்ளன. அவர்களில் கோட்டை மேற்கு வாயிலருகே வசிக்கும் சில குடும்பத்தினர் மட்டுமே கோட்டை வேளாளருக்கு வேலைக் காரர்களாகப் பணிசெய்கின்றனர். கொத்தமாரும் வேளாளரே அவர்கள் பலால் உண்பர். பற்பல வகையினரையும் தன்னுள் கொண்ட வேளாள சாதியில் பிற வகையினரால் கொத்தமார் சற்றுத் தாழ்வானவர்களாகக் கருதப்படுகின்றனர்"

48. இதை ஆதாரமாகக்கொண்டு சென்னை அரசு ஊழியர் சே, ஏ. பாய்ல், கோட்டைவேளாளர் பெண்களைத் தனிமைப் படுத்தி வைத்திருக்கும் வழக்கம் தலைமுறை தலைமுறையாக வரும் சாதி ஆசாரம் அல்ல என்றும், அது அவர்களின் தனிப்பட்ட குடும்ப வழக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்றும் கூறுவர். ("தென்னிந்தியச் சாதிகளைப் பற்றிய குறிப்புகள்"—"இந்தியன் ஆன்டிகுவாரி"; 3-ஆம் தொகுதி, 1874; பக்கங்கள் 287—9.